DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.ராஜ்குமார் | Father/Husband Name : ஜெயராஜ் |
| Age : 37 | Village : உசிலம்பட்டி |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6 Mar 2026 13:07
(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது இராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் அம்மாபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தலைமை காவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 21.03.2021 ம் தேதி 10.30 மணிக்கு குற்ற எண் 14/2021 பிரிவுகள் 294(பி), 324, 323, 506(2) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் பதிவு செய்த வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்புராஜ் மற்றும் ஆழ்வார்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). .**

3. சம்பவ இடத்தில் இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தபட்ட அரிவாள் ஒன்றினை 12.15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அத்தாட்சியில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகவும், அரிவாள் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் சாட்சிகள் பாக்கியலட்சுமி, தங்கப்பாண்டியன், தங்கவேலம்மாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளிலிருந்து நந்தினி சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்தது, எனவே அவரை நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரிகள் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

5. எதிரி மந்திரமூர்த்தி என்பவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிவதால் அரசு போக்குவரத்து கழக மேலாளர் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து மேற்படி எதிரி மந்திரமூர்த்தி பணியில் இருந்ததற்கான சான்றினை பெற்றேன். பின்னர் மருத்துவர் முகிலன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்தேன்.

6. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் கிருஷ்ணமூர்த்தியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரிவாளை படிவம்-91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர்.324/2021 கிடைக்கப்பெற்றேன். **(படிவம்-91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் நான் சாத்தூர் மதுவிலக்கு காவல்நிலையத்திற்கு பணிமாறுதலில் சென்றதால் மேற்படி வழக்கு கோப்பை காவல்நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

7. எதிரிகளுக்கும் புகார்தாரர் பாக்கியலட்சுமிக்கும் புகார்தாரரின் வீட்டு முன்பு இருக்கும் அரசு புறம்போக்கு இடத்தை பயன்படுத்துவதில் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். அந்த பிரச்சனை தொடர்பு தரப்பினர்கள் இருவரும் மாறி மாறி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து எங்களுடைய காவல்நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கிலிருந்து எதிரிகள் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

8. 1வது எதிரி மந்திரமூர்த்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரிக்கு இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு விபத்து ஏற்பட்டு அவருடைய வலது கால் முழுவதும் அறுவை சிகிச்சையின்போது பிளேட் வைத்துள்ளார் என்றால் சாதாரணமாக நடப்பது போல் நடக்கவில்லை, ஆனால் அவருடைய காலில் பிளேட் வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் 1வது எதிரி மந்திரமூர்த்திக்கு காலில் பிளேட் வைக்கப்பட்டிருந்தது என்றாலும் அவரால் நடக்கமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

9. பாக்கியலட்சுமி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரிகள் அரிவாளை கொண்டுசென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ளாரா என்றால் சந்தில் போட்டுவிட்டு சென்றதாக கூறியுள்ளார். என்னுடைய விசாரணையில் பாக்கியலட்சுமி எதிரிகள் சண்முகராணி மற்றும் நந்தினி ஆகியோர் தலை முடியை பிடித்து இழுத்ததாக கூறியுள்ளார்களா என்றால் சண்முக ராணி தலைமுடியை பிடித்து இழுத்ததாக கூறியுள்ளார். புகார்தாரரின் உறவினர் தங்கமுத்து என்பவர் காவல்துறையில் பணியாற்றுகிறார் என்றால் அது பற்றி என்னுடைய விசாரணையில் எதுவும் தெரியவில்லை. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த நபரின் தூண்டுதலின் பேரில் தான் இந்த வழக்கு எதிரிகள் மீது எங்கள் காவல் நிலையத்தில் பல வழக்குகள் பதிவு செய்தோம் என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் பொய்யாக கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசின் புறம்போக்கு நிலத்தை பயன்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக இந்த வழக்கு புகார் பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

6 Mar 2026 13:30

Judicial Magistrate 2, Sattur.